வேலூர் மாவட்டம் - காட்பாடியில் தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உரை!

வேலூர், நவ.12-

இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என வேலூர் மாவட்டம் காட்பாடியில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

வேலூர் வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் காட்பாடி சேவூர் குருசாமி திருமண மண்டபத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமை தாங்கினார். மாவட்டப் பொறுப்பாளர் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி., அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக தி.மு.க பொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி பேசுகையில்,

கட்சி நிர்வாகிகள் இப்பொழுது இருந்தே தேர்தல் பணியாற்ற வேண்டும் என்பதற்காக 5 தொகுதிகளை நந்தகுமார் பார்ப்பது சிரமம் என்பதால் கதிர்ஆனந்திற்கு காட்பாடி, கே.வி. குப்பம் தொகுதிகளை முதல்வர் கொடுத்துள்ளார். அனைவருக்கும் ஒரே கொள்கைதான். கட்சி நிர்வாகிகள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

கதிர்ஆனந்த் பொறுப்பினை ஏற்று பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும். நாடாளுமன்ற தேர்தலில் கே.வி. குப்பம் தொகுதியில் 18,000 வாக்குகளை அதிகமாக கதிர்ஆனந்த் பெற்றார். அதேபோல வரும் சட்டமன்ற தேர்தலில் 28 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் கே. வி.குப்பம் தொகுதியில் தி.மு.க., வெற்றி பெறும். காட்பாடி தொகுதியில் நான் இல்லாவிட்டால் கூட இந்த தொகுதியை நண்பர்கள் கட்டிக் காப்பார்கள். கே.வி. குப்பம் தொகுதிக்கு அதிகமான உழைப்பு தேவைப்படுகிறது. இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். கலைஞர் இருக்கும்போது அவர் சின்ன பிள்ளை. ஆனால் இன்று பிரதமருக்கே சவால் விடும் அளவுக்கு சிறந்த தலைவராக திகழ்கிறார். எல்லோரும் கட்சிக்கு ஆள் தேடுகிறார்கள். ஆனால் நாம் ஆள் தேடாமல் இருப்பவர்களை வைத்து தேர்தலை நடத்துகிறோம் என்றார்.

இராணிப்பேட்டை மாவட்ட செயலாளரும், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சருமான ஆர். காந்தி கலந்து கொண்டு பேசுகையில்,

கடந்த நான்கரை ஆண்டுகளில் இந்தியாவே பாராட்டும் ஆட்சியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நடத்திக் கொண்டிருக்கிறார். எந்த எஸ்.ஐ.ஆர் திட்டம் வந்தாலும் தி.மு.க., வையோ, முதலமைச்சரையோ ஒன்றும் செய்ய முடியாது. 7வது முறையாக தி.மு.க தான் ஆட்சி பொறுப்பேற்கும்.

நம்மிடையே ஒற்றுமை தேவை. அது இருந்தால் போதும். 200 தொகுதிகளில் தி.மு.க., வெற்றி பெறும்.காட்பாடி, கே.வி. குப்பம் தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். 2026 ல் வெற்றி நமது தான். ஒற்றுமையாக பாடுபட வேண்டும். இதனை தொண்டர்கள் சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

கொள்கை பரப்பு செயலாளர் எஸ்.ஜெகத் ரட்சகன் எம்.பி., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணைமேயர் எம். சுனில்குமார், தொகுதி பார்வையாளர்கள் குறிஞ்சி சிவகுமார் மதுசூதனன்,

பகுதி செயலாளர்கள் ஜி. வன்னியராஜா, என்.பரமசிவம், பி.முருகப்பெருமாள், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, காட்பாடி ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சரவணன், எஸ்.தணிகாசலம், கே.கருணாகரன், சி.ரவி, ஏ. கே.முருகன், கே.வி. குப்பம் ஒன்றிய செயலாளர்கள் சீதாராமன், லோ.ரவிச்சந்திரன், எஸ்.முருகேசன், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் பூஞ்சோலை சீனி வாசன், வேலூர் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.முரளி பாஸ்கர்,

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பிரபு,

மாநகராட்சி கவுன்சிலர்கள் அன்பு, விமலா, டீடா சரவணன், நித்திய குமார், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் டீக்காராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

வேலூர் மாவட்டத்தை நிர்வாக வசதிக்காக இரண்டாக பிரித்து காட்பாடி மற்றும் கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய வேலூர்வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளராக பணியாற்ற வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்

டி.எம்.கதிர் ஆனந்த் அவர்களை நியமனம் செய்த கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி

மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் கழக பொதுச் செயலாளர் நீர் வளம் சட்டமன்றம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் மாநில இளைஞரணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வேலூர் வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலும் இப்பொது

உறுப்பினர்கள் கூட்டத்தின் சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறது.

தமிழகம் முழுவதும் வரும் 2026 ல் இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் புதிய வாக்காளர் பட்டியல் உருவாக்கிட எஸ்ஐஆர் என்கிற வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த முறை பணிகளில் வேலூர் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட காட்பாடி கே வி குப்பம் சட்டமன்ற தொகுதிகளில் கடந்த நவம்பர் 4 முதல் டிசம்பர்

4 வரை நடைபெறும் பணிகளில் மாநில மாநகர ஒன்றிய பகுதி பேரூர் வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் பாக முகவர்கள் பி எல் ஏ 2 கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து வாக்காளர் பட்டியல் திருத்தம் பணியில் சிறப்பாக பணியாற்றி எஸ்ஐஆர் எனும் சதி வலையில் சிக்காமல் மக்களை காக்க வேண்டும் நம் மக்களை காக்க வேண்டிய பொறுப்பு திமுகவுக்கு உள்ளது. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பை பலப்படுத்துவோம், கடமை ஆற்றுவோம்.

வாக்குரிமையையும் ஜனநாயகத்தையும் காப்போம்என இப்பொது உறுப்பினர்கள் கூட்டத்தின் சார்பாக தெரிவித்து கொள்கிறது.

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாநகர, ஒன்றிய, பகுதி பேரூர், வட்டக் கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட, ஒன்றிய குழு உறுப்பினர்கள் பாக முகவர்கள் பி.எல்.ஏ.2 ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு ஆலோசனை

களை வழங்கிய மாநில இளைஞரணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வேலூர்வடக்கு மாவட்ட கழகம் சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டு களையும் தெரிவித்துக் கொள்கிறது.

வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பகுதியில் வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களின் கோரிக்கையான கே வி குப்பம் மற்றும் காட்பாடி சட்டமன்ற தொகுதி வள்ளிமலையில் அரசு கலைக் கல்லூரிதந்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டா லின் அவர்களுக்கும் போராடி பெற்று தந்த கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் இந்த பொது உறுப்பினர்கள் கூட்டம் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதியில் தமிழக வரலாற்றிலேயே இல்லாத வகையில் ஏழைஎளியநடுத்தர, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் படித்த இளைஞர்கள் பயன் பெறும் வகையில் மூன்று சிப்காட் அமைத்து தந்த மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சேர்க்காடு புறநோயாளிகள் பிரிவு அரசு சுகாதார மருத்துவமனை 100 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையை அமைத்து தந்த கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் இந்த பொது உறுப்பினர்கள் கூட்டம் நன்றியை மகிழ்ச்சியும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவண்ணாமலையில் - சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வைக் கண்டித்து

15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மனிதநேய ஜனநாயகக் கட்சித் தலைவர் தமிமுன் அன்சாரி கண்டன உரை!

திருவண்ணாமலை, நவ.12-

திருவண்ணாமலை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகார போக்கில், தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டுவந்துள்ளதைக் கண்டித்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். கண்டன ஆர்ப்பாட்டம் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், எம்.பி. தலைமையில். மனிதநேய ஜனநாயகக் கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி கண்டன உரை நிகழ்த்தினார்.

நேற்று (11.11.2025 செவ்வாய்க் கிழமை) காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை அண்ணா சிலை அருகில், திருவண்ணாமலை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகார போக்கில், தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டுவந்துள்ளதைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமை வகித்தார்.

கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி, மாநில மதிமுக இலக்கிய அணி அமைப்பாளர் காரை செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கண்டன ஆர்பாட்டத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திமுக மற்றும் கூட்டணி இயக்கத்தினர்

பறிக்காதே! பறிக்காதே! வாக்குரிமையை பறிக்காதே!

நீக்காதே! நீக்காதே! தமிழர்கள் வாக்கை நீக்காதே!

செய்யாதே செய்யாதே! வாக்காளர் பட்டியலில் முறைகேடு செய்யாதே!

என் வாக்கு! என் உரிமை!

திருடாதே! திருடாதே! வாக்கை திருடாதே!

கைவைக்காதே! கைவைக்காதே! வாக்குரிமையில் கைவைக்காதே!

சிதைக்காதே! சிதைக்காதே! மக்களாட்சியை சிதைக்காதே!

நிறுத்து! நிறுத்து! ஞஐசு யை நிறுத்து!

கைவிடு! கைவிடு! ஞஐசு யை கைவிடு!

பாஜகவே! பாஜகவே! புறவாசலில் நுழையாதே!

தேர்தல் ஆணையமே! தேர்தல் ஆணையமே!

பாஜகவின் கைத்தடியா நீ?

கவனமாயிருப்போம்! கவனமாயிருப்போம்!

பாஜகவிடம் கவனமாயிருப்போம்! என கொளுத்தும் வெயிலிலும் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி கண்டன உரை நிகழ்த்தினர்.

அவர் ஆற்றிய உரையிலிருந்து:-

பாரதிய ஜனதா கட்சி தொடர்சியாக மூன்று முறை இந்திய ஒன்றியத்தின் தலைமை பொறுப்பிலிருந்து கொண்டு இந்தியாவின் தனி தன்மை வாய்ந்த சுதந்திர அரசியல் தன்மை அனைத்தையும் கபடி கரம் செய்து வருகிறது. மத்திய புலனாய்வு துறை பாரதிய ஜனதா கட்சியின் கிளை அமைப்பாக உள்ளது. இந்தியாவின் தேர்தல் ஆணையமும், பாரதிய ஜனதாவின் கபடிகரம் பட்டியலில் உள்ளது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் கொல்லைபுற வெற்றி. நாடாளுமன்ற தேர்தலில் மாலை 7 மணி வரை சரியாக நடந்த தேர்தல், 7 மணிக்குமேல் அனைத்து நிலைகளும் மாற்றப்பட்டது. ஆனால் அதை இது வரை எந்த தேர்தல் ஆணையமும் தெளிவுப்படுத்தவில்லை.

வந்தாரை வாழவைக்கும் தமிழகம், வடநாட்டில் இருந்து வருபவர்களை தாக்குவதாக ஒரு பிரதமரே வாக்குக்காக பொய்பிரச்சாரம் செய்வது இந்த நாட்டில் தான் நடைபெறுகிறது.

வாக்குசாவடி இயந்திரங்களில் பிரச்சனைகள் உள்ளது, காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல்காந்தி கடந்த மூன்று ஆண்டுகளாக, கர்நாடகாவில் நடந்த தில்லுமுல்லு, அதன் பிறகு மகாராஷ்டிராவில் நடந்த தில்லுமுல்லு, முன்றாவதாக பீகாரில் நடந்த வாக்கு திருட்டு தில்லு முல்லு, நான்காவதுயாக அரியானவில் நடந்த தில்லுமுல்லுகளை வெளிகொண்டு வந்தார். பாஜக விற்கு எங்கு வாக்காளர்களை நீக்க வேண்டும் எங்கு சேர்க்க வேண்டும் என்ற ராஜதந்திரம் தெரியும். இந்த தில்லுமுல்லுகளை தொடர்ந்து செய்து வருகிறது. வாக்காளர் படிவம் தருவதில்கூட தற்போது கட்டுப்பாடுகள் விதித்துள்ளார்கள். இந்த பணியினை தேர்தல் ஆணையம் ஒரு வருடத்திற்கு முன்பாக அல்லது ஆறு மாதத்திற்கு முன்பாக தொடங்கி இருக்க வேண்டும். தற்போது ஒரு மாதம் உள்ள நிலையல் தேர்தல் ஆணையம் நெருக்கடி கொடுத்து வருகிறது.

பீகாரில் பலபேர் இறந்து போனதாக வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்டவர்கள், தற்போது உயிரோடு உள்ளார்கள் என்றும், அவர்களோடு ராகுல் காந்தி தேநீர் அருந்தி, தேர்தல் ஆணையத்தின் தில்லுமுல்லுகளை வெளிகொண்டுவந்தார். இதை போன்ற என்னற்ற தில்லுமுல்லுகளை பாஜக அரசு தொடர்ந்து செய்து வருகிறது. தற்போது தமிழகத்திலும் அந்த தில்லுமுல்லுகளை செய்ய முயற்சித்து வருகிறது. இதுதான் இரட்டை இன்ஜின்களாக செயல்படும் மோடி அவர்களும், அமித்ஷா அவர்கள் செய்த சாதனை, இவர்கள் தான் தேர்தல் ஆணையத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு என்ன வேண்டுமானலும் செய்ய முடியும் என நிலையை உருவாக்கி வெற்றி பெறுவதற்கான பல சூழ்ச்சிகளை செய்து வருகிறார்கள்.

இவ்வாறு உரையாற்றினார்.

கண்டன ஆர்ப்பாட்டாத்தில் தெற்கு மாவட்ட மதச்சார்பற்ற கூட்டணியின் நிர்வாகிகள் காங்கிரஸ் மாவட்ட தலைவர் செங்கம் ஜி.குமார், திராவிடர் கழக மாவட்டத் தலைவர் சி. மூர்த்தி, மதிமுக மாவட்ட செயலாளர் சீனி.கார்த்திகேயன், சி.பி.எம். மாவட்ட செயலாளர் பா.செல்வம், சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் இரா.திருமலை. முஸ்லீம் லீக் மாவட்டத் தலைவர் ஐ.எம்.சுலைமான்,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் சி.நியூட்டன், பா.வளர்மதி, மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் ஏ.ஆர்.ாநசர்உசேன், மக்கள் நீதி மய்ய மண்டல செயலாளர், இரா.அருள், தமிழக வாழ்வுரிமைக்கட்சி மாவட்ட செயலாளர்கள் கா.கண்ணதாசன், மல்லி. வினோத், ப.ராஜசேகர் மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செலயாளர் ஜி. கேட்குமார்,

வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் நிர்வாகிகள், காங்கிரஸ் மாவட்ட தலைவர் எஸ்.பிரசாந்த், திராவிடர் கழக மாவட்ட தலைவர் அ.இளங்கோவன், மதிமுக மாவட்ட செயலாளர்கள் எஸ்.கே.ரத்தினகுமார், வி.கே.சுதாகரன், முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் டி.எம்.பீர் முகமத், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள், அ.அசுரவடிவேல், ஆரணி முத்து, வெம்பாக்கம் மதியழகன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் எச்.ஜமால், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட செயலாளர் ச.சுரேஷ், க. பாரதிதாசன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் டி.கராத்தே கமல், திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகிகள் கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், பொன் முத்து, எஸ். பன்னீர்செல்வம், பிரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன், வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் இரா.ராஜசேகர், கே.வி.ராஜ்குமார், நா. பாண்டுரங்கன், க.லோகநாதன், டி.ஏ.தட்சணமூர்த்தி, ஜெயராணி ரவி மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இயக்கங்களின் மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், பகுதி, கிளை, வட்டக் கழக நிர்வாகிகள், அணிசார்ந்த நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில்

தாம்பரம் தொகுதி - பகுதிச் செயலாளர்கள் கூட்டம்!

பரிதி இளம்சுருதி எம்.சி. தலைமையில் நடைபெற்றது

சென்னை, நவ. 12 -

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டலின்படி, தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா முன்னிலையில், கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி தலைமையில், காஞ்சி வடக்கு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றிய செயலாளர் ஆலோசனை கூட்டம் சிட்லபாக்கம் சாலையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது,

இக்கூட்டத்தில் பாசிச பாஜக மத்திய அரசின் சதி வேலையான (SIR Special Intensive Revision) மற்றும் பாகங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசிக்கப்பட்டது, இதில் ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி (எ) விவேகானந்தர், மண்டல குழு தலைவர் இந்திரன், பகுதி கழகச் செயலாளர்கள் காமராஜ், ஆ. நடராசன, இரா. சுரேஷ், எம்.சேகர், கலந்து கொண்டனர்.

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின்

மாநில - மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் !

செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, நவ.12-

கழக சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை நடைபெறுகிறது என்று அதன் செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞரணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (13.11.2025 வியாழன்) மாலை 4 மணியளவில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞரணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், 19.11.2025 புதன்கிழமை மாலை 4.00 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் போஸ்வெங்கட், எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம், செயலாளர்கள் மா.உமாபதி, இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என். தில்லைசெல்வம் துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன், எம்.எஸ்.ஹரிபாபு, என்.எஸ்.மாதேஷ்வரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

பொருள் : 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்தநாள்.

2. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 600 018.
நாள்: 11.11.2025.

வாகை சந்திரசேகர்
தலைவர்,
கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை.

பகுதிச் செயலாளர் ஜெயராமன் முன்னிலையில்

36வது வட்ட பாக முகவர்கள் - தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் கூட்டம்!

வட்டச் செயலாளர் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி அறிக்கை!

சென்னை, நவ.12-

36வது வட்ட கழக நிர்வாகிகள் பாக பொறுப்பாளர்கள் BLA (2) பாகமுகவர்கள் (I.T WING) தகவல் தொழில் நுட்ப பிரிவு பாக இளைஞர் அணி கலந்தாய்வு கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து வட்டச் செயலாளர் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பெரம்பூர் தெற்கு பகுதி 36வது வட்ட கழக நிர்வாகிகள் பாக பொறுப்பாளர்கள் BLA (2) பாகமுவர்கள் (I.T. WING) தகவல் தொழில் நுட்ப பிரிவு பாக இளைஞர் அணிகள் ஆய்வு கூட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் ஜெயராமன் முன்னிலையில் இன்று (12.11.2025 - புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் இ.எச்.ரோடு எருக்கஞ்சேரி இந்திர காந்தி நகர் மெயின் ரோட்டில் உள்ள லட்சுமி ஹாலில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி., தொகுதி தேர்தல் பார்வையாளர் கண்ணிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர். எனவே தாங்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி அறிக்கை விடுத்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி தலைவர் –

கழக முன்னோடி வேளச்சேரி கெ.எல்லப்பன் மருத்துவமனையில் அனுமதி!

ஜெ.எச்.எம்.அசன் மௌலானா எம்.எல்.ஏ. – நிர்வாகிகள் நலம் விசாரித்தனர்

சென்னை, நவ. 12 -

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்கு பகுதி 175 வது வட்ட பொருளாளர் கெ. எ. தணிகைவேல் தந்தையும், பகுதிக் கழக முன்னோடியும், சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி மாவட்ட தலைவருமான கெ எல்லப்பன் அவர்கள் உடல் நலக் குறைவால் கிண்டி கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்.

தகவல் அறிந்து, நேற்று (11 - 11 - 2025) வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எச்.எம். அசன் மௌலானா நேரில் வந்து நலம் விசாரித்தறிந்தார். அவருடன் வேளச்சேரி மேற்கு பகுதி காங்கிரஸ் தலைவர், கே.பி.ஜேம்ஸ் சர்ச்சில், தொகுதி பொறுப்பாளர் பி.ரவி, இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் சைதை சதாம், ஐ.டி. விங் பெசன்ட் மதன் மற்றும் பலர் உடன் வந்து நலம் விசாரித்தனர்.

தி.மு.க. பொறியாளர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

திருநெல்வேலி மத்திய மாவட்டம்

திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட முருகபெருமாள் அவருக்குப் பதிலாக, மாவட்ட துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட **எ.அருள்வின் ரொட்ரிகோ,** (18ஏ, பரதவர் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி) அவர்கள் திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எம். செந்தில்குமார், வி.ராம்சங்கர் ஆகியோருக்கு பதிலாக,

அ.முகமது அலி, மானூர், திருநெல்வேலி

எஸ்.மகாராஜன், 23, பாகவதர் தெரு, மேலக்கருங்குளம், மேலப்பாளையம். திருநெல்வேலி.

எம். கண்ணன், 62, வலம்புரி அம்மன் கோவில் தெரு, திருநெல்வேலி டவுன்.

ஆகியோர் திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11-11-2025.

கு. கருணாநிதி
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி